**தமிழ்நாடு அனைவருக்கும் கல்வி இயக்கம்**

**"அனைவரும் கற்போம்"** **"அனைவரும் உயர்வோம்"**

**அனுப்புநர்**

**திரு.அ.முகமது அஸ்லம், இ.ஆ.ப.,**
மாநிலத் திட்ட இயக்குநர்,
அனைவருக்கும் கல்வி இயக்கம்,
சென்னை–600 006.

**பெறுநர்**

**மாவட்டத் திட்ட ஒருங்கிணைப்பாளர்**
அனைத்து மாவட்டங்கள்

**ந.க.எண். 1168 /அ3/MDO/ அகஇ / 2012 நாள் 19.06.2012**

**பொருள்:** அனைவருக்கும் கல்வி இயக்கம் – கல்வி உரிமை சான்று (Kalajatha) கலைக் குழுவினரை கண்டறிதல் மற்றும் நிகழ்ச்சிகளை நடத்துதல் – சார்ந்து.

**பார்வை :** அனைவருக்கும் கல்வி இயக்க மாநிலத் திட்ட இயக்குநரால் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்கள் மற்றும் மாவட்டத் திட்ட ஒருங்கிணைப்பாளர்களுக்கு நடத்தப்பட்ட கலந்தாய்வு கூட்ட நடவடிக்கைகள் நாள் 11.05.2012.

******

பார்வையில் கண்டுள்ள கடிதத்தின்படி கல்வி உரிமை இயக்கம் சார்ந்த செயல்பாடுகளில், இலவச கட்டாய கல்வி உரிமை சட்டம் பற்றிய விழிப்புணர்வை ஒவ்வொரு குடியிறுப்புகளுக்கும் சென்று கலை நிகழ்ச்சிகள் மூலம் நடந்த முடிவு செய்யப்பட்டது.

மேற்படி இலவச கட்டாய கல்வி உரிமை சட்டம் சார்ந்த கலை நிகழ்ச்சிகளை, கல்வி சார்ந்த கலைக்குழுவினர் மூலம் திட்டமிட்டு நடத்த முடிவு செய்யப்பட்டுள்ளது. இதன்படி ஒவ்வொரு மாவட்ட அளவிலும் மற்றும் வட்டார அளவிலும் உள்ள கலைக் குழுவினரை கண்டறியவும், கலை நிகழ்ச்சிகளை திட்டமிடவும், மேலும் ''கல்வி உரிமை இயக்கம்'' சார்ந்து பள்ளி மாணவர்களுக்கு நடத்தப்படும் கவிதை, கட்டுரை, ஒவியம் மற்றும் பேச்சுப் போட்டிகளுக்கு தலைப்புகளை முடிவு செய்யவும் மற்றும் விழிப்புணர்வு பேரணியின் போதும், சுவர் விளம்பரங்களிலும் பயன்படுத்தப்படும் வாசகங்களை முடிவு செய்யவும் 21.06.2012 அன்று அனைவருக்கும் கல்வி இயக்கம், மாநில திட்ட இயக்ககத்தில் அனைத்து மாவட்டத் திட்ட ஒருங்கிணைப்பாளர்களுக்கான கூட்டம் நடத்த முடிவு செய்யப்பட்டுள்ளது.

அனைத்து மாவட்டத் திட்ட ஒருங்கிணைப்பாளர்களும் தவறாமல் கலந்து கொள்ள வேண்டும் என்றும், மாவட்டத் திட்ட ஒருங்கிணைப்பாளர்கள் வரமுடியாத சூழ்நிலையில் உதவி மாவட்டத் திட்ட ஒருங்கிணைப்பாளர்கள் (ADPC) தவறாமல் கலந்து கொள்ள வேண்டும்

www.TeacherTN.com

என்றும் மேலும் கூட்டத்திற்கு வரும் பொழுது கீழ்க்கண்டவற்றை கொண்டு வர வேண்டும் என்றும் அறிவுறுத்தப்படுகிறது.

1. பள்ளி மாணவர்களுக்கு நடத்தப்படும் கவிதை, கட்டுரை, ஒவிய மற்றும் பேச்சு போட்டிகளுக்கான பல்வேறு தலைப்புகள்
2. இலவச கட்டாய கல்வி உரிமை சட்டம் சார்ந்த வாசகங்களை உருவாக்கக் கூடிய மற்றும் அனுபவமுள்ளஆசிரியர்கள்/ஆசியிரிப் பயிற்றுநர்கள்/ மாவட்ட ஒருங்கிணைப்பாளர்கள்/ கலை குழுவினர்கள் பெயர் பட்டியல்.

**மாநிலத் திட்ட இயக்குநருக்காக**

www.TeacherTN.com